பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 05 2025 **FRIDAY** 7 15 **AM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்திய-பாகிஸ்தான் எல்லையில் நிலவும் சூழல் தொடர்பாக உயரதிகாரிகளுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆலோசனை நடத்தியுள்ளார்.

2. பதற்றத்தை தூண்டும் எந்தவொரு நடவடிக்கையையும் இந்தியா வெற்றிகரமாக முறியடிக்கும் என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. நாட்டில் தேவைக்கு அதிகமான அளவில் உணவு தானியங்களின் கையிருப்பு உள்ளதாக மத்திய உணவு அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

4. உலக கத்தோலிக்க திருச்சபையின் புதிய தலைவராக அமெரிக்காவைச் சேர்ந்த கார்டினல் **Robert Francis Prevost** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

5. உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி அமெரிக்காவில் இன்று தொடங்குகிறது..

**>>>>>>><<<<<<**

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் நிலவும் சூழல் தொடர்பாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உள்ளிட்ட உயரதிகாரிகளுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆலோசனை நடத்தியுள்ளார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடர்ந்து, நாட்டின் மேற்கு எல்லைப்பகுதிகளில் நிலவும் சூழல் தொடர்பாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், பிரதமரிடம் விரிவாக விளக்கினார்.

எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில் பாகிஸ்தான் தொடர்ந்து அத்துமீறி நடத்தி வரும் தாக்குதல்கள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

பாகிஸ்தானுடனான எல்லைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள தயார்நிலை குறித்தும், அரபிக்கடலில் போர்க்கப்பல்களின் தயார் நிலை குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மத்திய உள்துறை செயலாளர் திரு. கோவிந்த் மோகனும் இதுதொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

>>>>>>><<<<<<

எல்லையோர பகுதிகளில் பாகிஸ்தான் ராணுவத்தின் அத்துமீறிய வான்வழித் தாக்குதல்களை இந்தியா வெற்றிகரமாக முறியடித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் சத்வாரி, சம்பா, ஆர்.எஸ்புரா, ஆர்னியா பகுதிகளை நோக்கி பாகிஸ்தான் வான்வழி தாக்குதல்களை தொடுத்தது.

ஜம்மு, பதான்கோட், உதம்பூர் ஆகிய இடங்களில் உள்ள இந்திய ராணுவ நிலைகள் மீதும் பாகிஸ்தான் ட்ரோன் தாக்குதல்களை நடத்த முயற்சி மேற்கொண்டது. இவை அனைத்தையும் இந்திய ராணுவம் சுட்டு வீழ்த்தியதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்திய தரப்பில் எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் ஏவிய ட்ரோன்கள் அனைத்தையும் இந்தியாவின் ஒருங்கிணைந்த ட்ரோன் எதிர்ப்பு அமைப்பு திறம்பட சுட்டு வீழ்த்தியுள்ளது.

15 ராணுவ தளங்களை குறிவைத்து பாகிஸ்தான் செலுத்திய ஏவுகணைகளை **S-400** வான்பாதுகாப்பு அமைப்பின் மூலம் இந்தியா முறியடித்துள்ளது.

இதனிடையே, சம்பா மாவட்டத்தில் சர்வதேச எல்லையில் நேற்றிரவு பாகிஸ்தான் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட ஊடுருவல் முயற்சி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளதாக எல்லை பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<

பதற்றத்தை தூண்டும் எந்தவொரு நடவடிக்கையையும் இந்தியா வெற்றிகரமாக முறியடிக்கும் என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. **Marco Rubeio** விடம், அமைச்சர் திரு. ஜெய்சங்கர், நேற்றிரவு இந்தியாவின் நடவடிக்கைகள் தொடர்பாக தொலைபேசியில் விளக்கமளித்தார்.

எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக, துல்லியமாக திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கும் என்று திரு. **Marco Rubeio** உறுதியளித்ததாக திரு. ஜெய்சங்கர் சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இத்தாலி துணைப் பிரதமர் திரு. **Antonia Tajani–**யுடனும், ஐரோப்பிய யூனியன் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பிரதிநிதி திருமதி. **Kaja Kallas–**உடனும் வெளியுறவு அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

பாகிஸ்தானின் அத்துமீறிய தாக்குதல்களை தடுக்க இந்தியா மேற்கொள்ளும் பதில் நடவடிக்கைகள் குறித்து விரிவாக அவர்களிடம் விளக்கமளித்ததாக திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

**>>>>>>><<<<<<**

எல்லையில் நிலவும் பதற்றமான சூழலை தொடர்ந்து, முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சௌகான் மற்றும் ராணுவம், விமானப்படை, கடற்படை தளபதிகளுடன் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், நேற்று மீண்டும் ஆலோசனை மேற்கொண்டார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடர்ந்து, எல்லையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இதில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

ஜம்மு காஷ்மீரில், எல்லை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, எல்லைப் பாதுகாப்பு படைகளின் தலைமை இயக்குநர்களுடன் காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

விமான நிலையங்களின் பாதுகாப்பு குறித்து மத்திய தொழில் பாதுகாப்புப்படை அதிகாரிகளுடனும், திரு. அமித் ஷா ஆலோசனை மேற்கொண்டார்.

**>>>>>>><<<<<<**

பாகிஸ்தானின் அத்துமீறிய தாக்குதலை அடுத்து, எல்லையோர மாநிலங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ராஜஸ்தானில் முதலமைச்சர் திரு. **Bhajan Lal Sharma** தலைமையில் உயர்நிலை ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

பஞ்சாபிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பதான்கோட், அமிர்தசரஸ், பதிண்டா, ஜலந்தர் உள்ளிட்ட இடங்களை குறிவைத்து, பாகிஸ்தான் நடத்திய தாக்குதல்கள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன.

பஞ்சாப் மாநிலத்தில் பாகிஸ்தானுடனான 533 கிலோமீட்டர் நீள எல்லைப்பகுதியும் தீவிர கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

பஞ்சாப் காவல்துறையினரின் விடுப்பை அம்மாநில அரசு ரத்து செய்துள்ளது.

மருத்துவ அவசர நிலையை எதிர்கொள்ள சுகாதாரத்துறை தயாராக உள்ளது என பஞ்சாப் அரசு கூறியுள்ளது.

மாநிலத்தில் பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே திட்டமிடப்பட்ட அனைத்து தேர்வுகளும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

குஜராத் மாநிலம், காந்திநகரில் பாதுகாப்பு தொடர்பாக மாநில அமைச்சர் திரு. **Harsh Sanghavi** தலைமையில் உயர்நிலை ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

கட்ச், பதான், பனஸ்கந்தா மாவட்ட ஆட்சியர்களுடன் அவர் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மாநிலத்தில் குறிப்பிட்ட கடலோரப் பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்க, குஜராத் அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

**>>>>>>><<<<<<**

நாட்டில் பாதுகாப்பு காரணங்களுக்காக 24 விமான நிலையங்கள் மட்டும் மூடப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாடுமுழுவதும் உள்ள விமான நிலையங்களின் சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டதாக வெளியான தகவல்கள் தவறானவை என்று அந்த அமைச்சகம் விளக்கமளித்துள்ளது.

தில்லி விமான நிலையம் வழக்கம் போல் செயல்படுவதாகவும், சில விமானங்களின் சேவைகள் மட்டும் தாமதமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

நாட்டில் தேவைக்கு அதிகமான அளவில் உணவு தானியங்களின் கையிருப்பு உள்ளதாக மத்திய உணவு அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடான எல்லையோரப் பகுதிகளில் நிலவும் பதற்றமான சூழலை அடுத்து, நாட்டில் உணவு தானிய பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக வதந்திகள் பதவியுள்ளதை அடுத்து அவர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிம் பேசிய அமைச்சர், இதுபோன்ற தகவல்கள் தவறானவை என்று கூறியுள்ளார்.

அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பஞ்சாபில் இதுதொடர்பாக பரப்பப்பட்ட வதந்திகளை மக்கள் நம்ப வேண்டாம் என்று பிரல்ஹாத் ஜோஷி கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<

கேரளாவில் நிஃபா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டதை அடுத்து, அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திருமதி. வீனா ஜார்ஜ், நேற்று மாலை அவசர ஆலோசனையில் ஈடுபட்டார்.

மலப்புரம் பகுதியைச் சேர்ந்த 42 வயது பெண் ஒருவருக்கு இந்த பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அவருடன் தொடர்பில் இருந்த 7 பேர் பரிசோதிக்கப்பட்டதாகவும், அவர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட அந்த பெண் தற்போது மருத்துவதனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவருடன் தொடர்பில் இருந்த பிற நபர்கள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பாதிப்பை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மக்கள், முகக்கவசங்களை அணியுமாறும், சானிடைசர்களை பயன்படுத்துமாறும் திரு. வீனா ஜார்ஜ் கேட்டுக் கொண்டார்.

**>>>>>>><<<<<<**

உலக கத்தோலிக்க திருச்சபையின் புதிய தலைவராக அமெரிக்காவைச் சேர்ந்த கார்டினல் **Robert Francis Prevost** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

போப் ஆண்டவராக அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் தேர்வு செய்யப்படுவது இதுவே முதல்முறையாகும்.

69 வயதான **Robert Francis Prevost,** போப் 14ஆம் லியோ என அழைக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாடிகனில் நேற்று இரண்டாவது முறையாக நடைபெற்ற போப் தேர்வில் **Robert Francis Prevost** தேர்வு செய்யப்பட்டதை அடுத்து, தேவாலய புகைபோக்கியில் வெண்புகை வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் போப் லியோ முதலாவது உரையை நிகழ்த்தினார்.

**>>>>>>><<<<<<**

உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி அமெரிக்காவின் சிகாகோவில் இன்று தொடங்குகிறது.

வரும் 17ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் அனகத் சிங், வேலவன் செந்தில்குமார் உள்ளிட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

>>>>>>><<<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டி, அருணாச்சலப் பிரதேசத்தில் இன்று தொடங்குகிறது.

வரும் 18ஆம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், மாலத்தீவு, இலங்கை, நேபாளம் ஆகிய 6 நாடுகள் பங்கேற்கின்றன.

>>>>>>><<<<<<

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டியில் பதக்கப்பட்டியலில் மகராஷ்ட்ர மாநிலம் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

அந்த மாநிலம் இதுவரை 21 தங்கம், 18 வெள்ளி, 16 வெண்கலம் என 55 பதக்கங்களை வென்றுள்ளது.

11 தங்கப்பதக்கங்களுடன் ராஜஸ்தான் 2வது இடத்திலும், 10 தங்கப்பதக்கங்களுடன் கர்நாடகா 3வது இடத்திலும் உள்ளன.

4 தங்கம், 5 வெள்ளி, 9 வெண்கலப்பதக்கங்களுடன் தமிழகம் 8வது இடத்தில் உள்ளது.

>>>>>>><<<<<<

சீனாவில் நடைபெற்று வரும் உலக கோப்பை வில்வித்தை இரண்டாம் நிலை போட்டியில் இந்தியாவின் ரிசப் யாதவ், மதுரா ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் ரிசப் யாதவ், நெதர்லாந்தின் மைக்கை வென்றார்.

மகளிர் பிரிவு காலிறுதியில் மதுரா, சக இந்தியரான ஜோதி சுரேகாவை வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

>>>>>>><<<<<<

எல்லையில் நிலவும் பதற்றமான சூழல் காரணமாக, தரம்சாலாவில் நேற்று நடைபெறவிருந்த பஞ்சாப் - தில்லி அணிகளுக்கு இடையேயான ஐபிஎல் கிரிக்கெட் போட்டி பாதியிலேயே கைவிடப்பட்டது.

>>>>>>END<<<<<<